231—

சுற்றுலாத் தலம்

***7243—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாக்கோட்டை அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை திருக்கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதிக்குட்பட்ட சாக்கோட்டை பகுதியில் வீரசேகர உமையாம்பிகை திருக்கோயில் உள்ளது. தற்போது இத்திருக்கோயில் சிவகங்கை சமஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்திருத்தலத்திற்கு அதிக அளவில் ஆன்மீக சுற்றுலாப் பயணிகள் வருவதன் அடிப்படையில் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் சுற்றுலா அடிப்படை வசதிகளுக்கான முன்மொழிவுகளைப் பெற்று, கருத்துரு பெற்று இத்திருக்கோயிலின் சுற்றுப் பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதற்கு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டசோழ மன்னரால் கி.பி. 804 இல் ஆரம்பிக்கப்பட்டு 811 இல் முடிக்கப்பட்ட இத்திருக்கோயில், இன்றைக்கு இந்து சமய அறநிலையைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்தத் திருக்கோயில் உலகப் புகழ் பெற்ற கோபுர அமைப்பைக் கொண்டது. கருங்கற்களால் அதிநவீன வேலைப்பாடுகளுடன்கூடிய இத்திருக்கோயிலை, சுற்றுலாத் தலங்களில் சேர்த்துத் தந்தால், அதை வணங்குகின்ற ஆறு நாட்டார்*

2012 மே 8]

மக்களுக்கும் அது உதவும். அதைப்போல, வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் அது பயனாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இதைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இந்தத் திருக்கோயிலுக்கு என்று ஒரு வரலாறு உள்ளது. அதாவது வேடர் ஒருவர் வீர மரத்தின்கீழ் வள்ளிக்கிழங்கை தோண்டி எடுக்கையில் அங்கு சுயம்புலிங்கத்தின் மேல் அவருடைய ஆயுதம் பட்டதால் இரத்தம் பீறிட்டதில் வேடர் மயக்கமுற்றதாகவும், அந்தச் செய்தி கேட்டு சாக்கோட்டை அருகிலே கண்டனூரில் தொழுநோயால் பாதித்திருந்த சோழ மன்னர் காதுக்கு எட்டியதும் அவரது தொழுநோய் உடனே நீங்கியது என்றும், அதற்கு நன்றிக் கடனாகத்தான் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் திருக்கோயிலை அந்த மாமன்னர் எழுப்பினார் என்பதும் ஒரு புராண வழிச் செய்தியாக உள்ளது. தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்தச் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பிலேயே காரைக்குடி பகுதிக்கு 11 கோடி அளவிலே மத்திய அரசின் நிதியுதவி பெற்று, அங்கே சுற்றுலாத் தலம் அமைப்பதற்கும் அந்தப் பகுதிகள் வளர்ச்சி பெறுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த நிதியாண்டிலேயே நிச்சயமாக அவர் கேட்கக்கூடிய சுற்றுலா வளர்ச்சிப் பணி இந்தத் திருக்கோயிலில் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும், நானும் இந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் இதைத் தங்கள்வாயிலாக உறுதியாகச் சொல்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: What is your issue? *(குறுக்கீடு) உட்காருங்கள் டாக்டர் கிருஷ்ணசாமி. சுருக்கமாகச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே 13,000-த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் பல நாட்களாகக் காலவரையற்ற வேலைநிறுத்தத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் குடும்பங்கள் பட்டினியிலே இருந்து கொண்டிருக்கின்றன. மத்திய அரசு காலங்கடத்தி அங்கு சுமுகத் தீர்வை ஏற்படுத்தாமல் வளர்த்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நெய்வேலி நிருவாகம் வெளியாட்களைத் தொழிற்சாலைக்குள்ளே கொண்டு சென்று அந்தப் பணியை நடத்திக் கொண்டிருக்கிறது. இதிலே தமிழக அரசு வெறும் பார்வையாளராக மட்டும் இருக்க முடியாது. அங்கு சட்டம்-ஒழுங்கு, பதற்றம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு அமைச்சருடைய கவனத்தை ஈர்த்து, இதிலே தலையிட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நெய்வேலி பிரச்சினையா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, டெங்கு காய்ச்சல்தானே? தயவுசெய்து உட்காருங்கள். அதை இன்று எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*